# D E P O S I T I O N  OF W I T N E S S

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

PALLAVARAM.

CC.No.698/2023

Old.No.863/2010

P.W.1

| | |
|---|---|
| Name | : Tmt. Dr. Thenmozhi |
| Father/Husband Name | : S/o Chezhiyan |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 of the day of 12.09.2024.

**மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது மாமியார் மற்றும் மாமனாரை தவிர வேறு எந்த உறவினருக்கு எதிரி கடிதம் அனுப்பியுள்ளார் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் இல்லை உறவினர் என்று தான் குறிப்பிட்டுள்ளது. எனது கைப்பேசி எண்ணிற்கு பல கைப்பேசி எண்ணிலிருந்து என்னை தொடர்புக்கொண்டு மிரட்டினார். எனது கைப்பேசி எண்ணிற்கான அழைப்பு விவரங்களை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது நாத்தனார் நாகமணிக்கும் இந்த கடிதம் அனுப்பப்பட்டது. அவரை போலீஸ்சார் விசாரித்தார்களா என்றால் தெரிய வில்லை. அவர் எங்கு வசித்து வருகிறார் என்றால் முன்பு கனடாவில் வசித்து வந்தார். தற்போது குரோம்பேட்டையில் வசித்து வருகிறார்.

அசாஆ2ல் கடைசி பக்கத்தில் கையொப்பம் உள்ளது மற்ற பக்கத்தில் கையொப்பம் இல்லை என்றால் ஆம். எனது புகார் மனுவில் எதிரி ஆசிட் ஊற்றி விடுவேன் என்று தொலைப்பேசி மூலம் மிரட்டி வந்துள்ளார் என்றும் அந்த தொலைப்பேசி எண்ணும் , எந்த தேதியில் மிரட்டல் வந்தது என்பதை பற்றி புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் வெவ்வேறு அலைப்பேசியில் வந்ததாலும், மன அழுத்ததில் இருந்ததாலும் கூறவில்லை. மேலும் எதிரி மீது எனது உறவினர் இவ்வாறான புகாரை கொடுத்து அவை தவறுதல் காரணமாக முடித்து வைக்கப்பட்டது என்றால் அதை பற்றி தெரியாது.

நான் இவ்வழக்கின் புகார் கொடுப்பதற்கு முன்னதாகவே எதிரியின் அக்கா எனது சகோதரர் மெய்யநாதன் என்பவர் மீது புகார் கொடுத்து அவை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அந்த புகாருக்கு எதிராக தான் இவ்வழக்கு புகார் நான் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. எதிரி எனக்கு 60 பக்கம் கடிதம் அனுப்பியதால் தான் புகார் கொடுத்தேன். இவ்வழக்கின் எதிரி எனக்கோ, எனது மாமியார் மற்றும் நாத்தனாருக்கோ எந்த கடிதமும் அனுப்பவில்லை என்றும் மேற்படி அந்த புகாருக்காக கொடுக்கப்பட்ட பதில் புகார்தான் என்றால் சரியல்ல. பதிவு தபால் மூலம் எனக்கு எனது விலாசத்திற்கு வந்தது.

எதிரி மீது பொய்யான வழக்கு கொடுப்பதற்காக நானே கடிதத்தை தயார் செய்து எனது மாமனார் விலாசத்திற்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல எதிரியின் பெயர் போட்டு வந்தது. எதிரி மீது பொய்யான புகார் கொடுத்ததால் தான் எதிரி அழைத்த அலைப்பேசி எண்கள் மற்றும் அதன் அழைப்பு விவரங்களை நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கிற்கு பாதகமாக அமைந்து

விடும் என்பதால் தான் எனது கைப்பேசி எண்ணையும் போலீஸசாரிடம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் கேட்காததால் நான் கொடுக்கவில்லை. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி வழக்கில் குறிப்பிட்டுள்ள மிரட்டலோ, கீழ்தரமான செயல்கள் செய்து வர வில்லை என்றால் சரியல்ல. எதிரி தான் இந்த செயல்கள் செய்து வந்தார். அவரால் எனது வாழ்க்கையும், தொழிலும் அழிந்து விட்டது. எதிரி தான் அனைத்திற்கும் காரணம் ஆவார்.

**<u>குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது.</u>**

**<u>மறு விசாரணை - இல்லை.</u>**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.